முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1560

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.01.2024**, சனிக்கிழமை

1. ஞான பலம் கொண்ட அரங்கா
ஞானிகள் துணைகொண்ட தேசிகா
வானவர்கள் மெச்சும் அரங்கா
வாழும் வள்ளலே ஞானியே குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
சுப்ரமணியர் யானும் அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 21 ம் நாள், 06.01.2024, சனிக்கிழமை)
வரமென அரங்கன் தொடர்பு கூட்டி
வையகத்தில் வாழும் மக்களுக்கு
3. சரவணச் சுடராக சர்வ சூட்சுமமுமாக
சண்முகப் பெருமான் யானும் காட்சித் தருகின்றேன்
தருகவே அரங்கன் நாமஜெபம்
தரணியில் எங்கெல்லாம் முழங்குகின்றதோ
4. அங்கெல்லாம் சுப்ரமணியர் யானும் இறங்கி
அற்புதம்பட ஞான வழிகாட்டி உலகோர்க்கு
அரங்கன் தேடுகின்ற வண்ணம் யோகமும் ஞானமும்
சர்வ சூட்சுமமும் அடைந்து உலகில் சிறக்க வரம் தருகின்றேன்
5. தருகவே அரங்கமகான் உயர்வழிகள்
தரணியை மாற்றுவது உறுதிஉறுதி
பெருமைகொண்டு அரங்கன் தர்மத்தை காத்து
பேருலகில் தர்மபலம் கூட்டும் அன்பர்களுக்கும்
6. பிசகின்றி ஆறுமுகன் யான்
வெளிப்பட்டு காட்சித் தருவேன்
தருகவே சரவணச்சுடரேற்றி
தக்கபடி தர்மவழி நடப்பவரெல்லாம்

7. பெருமைகொண்ட ஞான உலகத்தில்
பிசகின்றி ஞான ஆட்சி படைத்து
தர்மவான் அரங்கர் தேர்வுவழி
தக்கபடி ஞானிகளாக சிறந்து உலகில் அற்புதம் படைப்பர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–